திரு. ஆற்காடு நா. வீராசாமி : தூக்குத் தண்டனையைப் பெற்று அதற்குப் பின்னால் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டிருந்தால், அவர்களுடைய விடுதலையைப்பற்றி 14 ஆண்டுகளுக்குப் பின்னால்தான் பரிசீலிக்க வேண்டுமென்று மத்திய அரசு சொல்லியிருந்தாலும், கேரள மாநிலத்தில் தூக்குத் தண்டனை பெற்றிருந்தாலும், ஆயுள் தண்டனையைப் பெற்றிருந்தாலும் சரி, அவர்கள் பத்தாண்டுக் காலம் சிறைத் தண்டனையை அனுபவித்த பிறகு விடுதலை செய்யப்படுவார்கள் என்று கேரள அரசாங்கம் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அதைப்போலவே நம்முடைய அரசாங்கமும், பத்தாண்டுக் காலம் சிறைத் தண்டனையை அனுபவித்தவர்கள் யாராக இருந்தாலும், ஆயுள் கைதியாக இருந்தாலும், தூக்குத் தண்டனையைப் பெற்ற கைதியாக இருந்தாலும், அவர்களை விடுதலை செய்வதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டுவருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : After receiving the necessary and requisite clarification from the Government of India, the suggestion made by the hon. Member Thiru Veerasami will be seriously considered by this Government.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : சிறைச்சாலையில் ஒரு கைதி உண்ணாவிரதம் இருந்தால், அதை சிறை அதிகாரிகள் அரசுக்கு உடனே தெரிவிக்கிறார்களா ? அதை இத்தனை காலத்திற்குள்தான் தெரிவிக்க வேண்டுமென்று ஏதாவது வரம்பு இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR : This does not arise from the main question. Anyway, the hon. Member Thiru Abdul Wahab may be pleased to put a separate question so that I may gather the material and place it before this House.

Selection Grade Scale of Pay to Headmasters.

*186 .*Q*—THIRU K. S. GANAPATHI and THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the Association of Headmasters for the grant of Selection Grade Scale of Pay to them; and

(*b*) if so, the action taken by the Government in this regard?

தலைமையாசிரியர்களுக்கு தேர்வுத்தர சம்பள வீதம்.

திரு. கே. எஸ். கணபதி & திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தலைமையாசிரியர்களுக்கு தேர்வுத்தர சம்பள வீதம் வழங்கப்பட வேண்டுமென தலைமையாசிரியர்கள் சங்கத்திடமிருந்து அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்குத் தேர்வுநிலை ஊதியம் அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு பரிசிலனை செய்து அதுபற்றிய கருத்துருவை தள்ளி வைத்தது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : எல்லா ஆசிரியர்களுக்கும் செலக்ஷன் கிரேட் உண்டு என்ற நிலைமையை உருவாக்கிவிட்டு, தலைமையாசிரியர்களுக்கு மட்டும் செலக்ஷன் கிரேட் இல்லாமல் இருக்கிறது. ஆகவே அவர்களுடைய இந்தக் குறையைப் போக்குவதில் காலதாமதப்படுத்துவது என்பது நியாயமில்லை என்று சொல்லி அவர்களுக்கு விரைவாக செலக்ஷன் கிரேட் அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : உயர்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் தலைமையாசிரியர்களுக்குக் கீழ்க்காணும் இரண்டு சம்பள விகிதங்களை அளிக்கலாம் என்று இரண்டாவது சம்பளக் குழு பரிந்துரை செய்தது :

- ஆயிரம் மாணவர்களுக்குக் குறைவாக உள்ள பள்ளிகளில் உள்ள தலைமையாசிரியர்களுக்கு ரூ. 450-25-750 என்றும்

ஆயிரம் மாணவர்களுக்கு மேலே உள்ள பள்ளிகளில் உள்ள தலைமையாசிரியர்களுக்கு ரூ. 500-25-625-30-745-35-850 என்றும் பரிந்துரை செய்தது. மேற்கண்ட சம்பள விகிதங்களைப் பெறும் தலைமையாசிரியர்களுக்குத் தேர்வுநிலை வழங்கலாம் என்று இரண்டாவது சம்பளக் குழு பரிந்துரை செய்யவில்லை. மேலும் இந்தக் கோரிக்கையை அரசு பரிசீலனை செய்து, இந்தக் கருத்துருவைத் தள்ளி வைத்தது. தற்போது இத்தகைய கோரிக்கைகள் மூன்றாவது சம்பளக் குழுவின் பரிசீலனைக்கு உட்பட்டவையாகும்.

(முற்பகல் 10-40)

திரு. பி. ஆர். தாமஸ் : 2—10—70-க்கும் முன்னதாக இரண்டு வேறுபட்ட ஊதிய விகிதங்கள் தலைமையாசிரியர்களுக்கு வழங்கப்பட்டன. அத்தோடு தலைமையாசிரியர்படி என்றும் வழங்கப்பட்டது. அதே முறையில் தலைமை யாசிரியர்படி என்ற வகையில் இப்போது வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்போது மூன்றுவது சம்பளக் கமிஷன் செயல்பட்டுக்கொண்டிருக்கும்போது இந்தக் கோரிக்கையை அவர்கள் முன்னுல் வைக்கலாம்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : புதிய கல்வித் திட்டத்தின் அடிப்படையில் ப்ளஸ் 2 என்ற ஹையர் செகண்டரி வகுப்புகளுக்கு உள்ளவர் ஹெட்மாஸ்டர் என்று அழைக்கப்படுவாரா அல்லது பிரின்சிபால் என்று அழைக்கப்படுவாரா? ஹையர் செகண்டரி பள்ளிக்கும் ஹைஸ்கூலுக்கும் ஒருவரே இருந்தால், அவரை பிரின்சிபால் என்பதா ஹெட்மாஸ்டர் என்பதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஹையர் செகண்டரி பள்ளியில் ஹெட்மாஸ்டர் இருப்பார். அது முழுமையான பள்ளியாக இருப்பதால், ஹெட்மாஸ்டர் என்பவர்தான் இருப்பார்.

Integration of 'A' and 'B' Wing Teaching Staff.

* 187 *Q.*—THIRU A. R. DAMODARAN, THIRU P. R. THOMAS and THIRU K. S. GANAPATHI : Will the Hon. the Minister for Education be pleased to state with reference to the answer given to Legislative Council Question No. 6, on the floor of the Council on 20th August 1977—

(*a*) whether the Government have had any discussions with the representatives of 'A' and 'B' Wing Teaching Staff regarding integration; and

(*b*) if so, the stage at which the matter now stands?

'ஏ' மற்றும் 'பி' பிரிவு ஆசிரியர்கள் ஒருங்கிணைப்பு

திரு. ஏ. ஆர். தாமோதரன், திரு. பி. ஆர். தாமஸ் & திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் 20—8—1977 அன்று சட்ட மன்ற மேலவையில் 6 ஆம் எண் வினுவிற்கு அளிக்கப்பட்ட விடையையொட்டி கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 'ஏ' மற்றும் 'பி' பிரிவு ஆசிரியர்களை ஒருங்கிணைப்பது தொடர்பாக அந்த ஆசிரியர்களின் பிரதிநிதிகளுடன் அரசு விவாதம் நடத்தியதா?

(இ) ஆம் எனில், இது தற்போது எந்த நிலையில் உள்ளது?

TRUTH ALONE TRIUMPHS